இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
சனிக்கிழமை 25-10-2025

# காஷ்மீர் மக்களை பழிவாங்குவது ஏன்?

“ஜம்மு - காஷ்மீருக்கு உரிய நேரத்தில் மாநிலத் தகுதி வழங்கப்படும்” என்று சொல்லி இருக்கிறார் உள்துறை அமைச்சர் அமித்ஷா.

**ஜம்மு - காஷ்மீருக்கு சிறப்புத் தகுதி வழங்கிய அரசமைப்புச் சட்டத்தின் 370 -ஆவது பிரிவை ரத்து செய்து ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. ‘உரிய நேரம்’ என்றால், இன்னும் எத்தனை ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்பதுதான் நம்முடைய கேள்வி.**

ஜம்மு - காஷ்மீருக்கு சிறப்புத் தகுதி வழங்கிய, அரசியலமைப்புச் சட்டப்பிரிவு 370 ஐ, கடந்த 2019 ஆகஸ்ட் மாதம் 5 ஆம் தேதியன்று ஒன்றிய பா.ஜ.க., அரசு ரத்து செய்தது. இதையடுத்து அம்மாநிலம், ஜம்மு - காஷ்மீர், லடாக் என இரு யூனியன் பிரதேசங்களாகப் பிரிக்கப்பட்டது. இதில், சட்டமன்றத்துடன் கூடிய யூனியன் பிரதேசமாக ஜம்மு - காஷ்மீர் பிரிக்கப்பட்டது. அது முதல் ‘ஜம்மு - காஷ்மீருக்கு மாநிலத் தகுதியை விரைவில் தருவோம்’ என்று பா.ஜ.க. சொல்லி வருகிறது. ஆனால் செய்யவில்லை.

ஜம்மு - காஷ்மீருக்கு சிறப்புத் தகுதி ரத்து செய்யப்பட்டதை 2023 டிசம்பரில் உறுதி செய்தது உச்ச நீதிமன்றம். ஆனால் ஜம்மு - காஷ்மீருக்கு முடிந்தவரை விரைவில் மாநிலத் தகுதி வழங்கும்படி வலியுறுத்தியது. அதன்பிறகும் பா.ஜ.க. அரசு அசைந்து கொடுக்க வில்லை.

2024 ஆம் ஆண்டு ஜம்மு - காஷ்மீர் சட்டசபைத் தேர்தல் நடந்தது. இதில் பரூக் அப்துல்லாவின் தேசிய மாநாட்டுக் கட்சி வெற்றி பெற்றது. உமர் அப்துல்லா, முதல்வராகப் பதவியேற்றார். அவரும், ஜம்மு - காஷ்மீருக்கு மாநிலத் தகுதி வழங்கும்படி ஒன்றிய பா.ஜ.க. அரசை வலியுறுத்தி வருகிறார்.

“நாங்கள் ஜம்மு - காஷ்மீரை முழுமையான மாநிலமாகப் பார்க்கக் காத்திருக்கிறோம். தாமதங்கள் ஏற்பட்டால், உச்ச நீதிமன்றத்தை அணுகுவதைத் தவிர வேறு வழியில்லை. மாநில அந்தஸ்து மீட்டெடுக்கப்படும்போது, எங்களுக்கு அதிக அதிகாரங்கள் கிடைக்கும் என்று நான் நம்புகிறேன்,” என்று தேசிய மாநாட்டுக் கட்சித் தலைவர் ஃபரூக் அப்துல்லா கூறினார்.

திடீர் திடீரென டெல்லியில் இருந்து, ‘ஜம்மு - காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து கொடுக்கப் போகிறார்கள்’ என்று செய்திகள் உலவும். கடந்த 10 ஆம் தேதி அன்று குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா ஆகியோர் ஒரே நாளில் அடுத்தடுத்து சந்தித்துப் பேசினார்கள். ஜம்மு - காஷ்மீருக்கு மாநிலத் தகுதி மீண்டும் வழங்கப்பட உள்ளதாக தகவல் வெளியானது. ஆனால் அப்படி எதுவும் நடக்கவில்லை.

கடந்த 18 ஆம் தேதியன்று பீகாரில் ஒரு மாநாட்டில் கலந்து கொண்ட உள்துறை அமைச்சர் அமித்ஷா, “ஜம்மு - காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்தை அளித்து வந்த அரசியல் சாசனத்தின் பிரிவு 370 ஐ நாங்கள் ரத்து செய்தோம். இதன்பிறகு பயங்கரவாதம் குறைந்து விட்டது. ஜம்மு-காஷ்மீரில் மீண்டும் ஜனநாயகம் நிலைநாட்டப்பட்டு விட்டது. ஜம்மு - காஷ்மீருக்கு உரிய நேரத்தில் மாநில அந்தஸ்து வழங்கப்படும். மாநில முதலமைச்சர் உமர் அப்துல்லாவிடம் பேசிய பிறகு தான் இந்த முடிவை எடுப்போம்” என்று சொல்லி இருக்கிறார்.

ஜம்மு - காஷ்மீருக்கான 370 ஆவது சிறப்பு அதிகாரம் பறிக்கப்பட்டு ஆறு ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆறு ஆண்டுகளாக அங்கு எந்த வன்முறையும் இல்லை என்கிறார் அமைச்சர். ஜனநாயகம் மலர்ந்து விட்டது, சட்டமன்றத் தேர்தல் நடந்துவிட்டது, நாடாளுமன்றத் தேர்தல் நடந்துவிட்டது, உள்ளாட்சித் தேர்தல் நடந்து விட்டது என்று பெருமைப்படுகிறார் அமைச்சர். இப்படி அமைதியான மாநிலத்துக்கு மாநிலத் தகுதியைத் தருவதற்கு தயக்கம் ஏன்?

ஜம்மு - காஷ்மீருக்கு மாநில அந்தஸ்தை மீண்டும் வழங்குவது தொடர்பான மனு மீதான விசாரணை கடந்த 10 ஆம் தேதி அன்று தலைமை நீதிபதி பி.ஆர்.கவாய் தலைமையிலான அமர்வில் உச்சநீதிமன்றத்தில் நடைபெற்றது. ஒன்றிய அரசின் சார்பில் ஆஜரான சொலிசிட்டர் ஜெனரல் துஷார் மேத்தா, மாநில அந்தஸ்தை மீட்டெடுப்பது குறித்து ஜம்மு-காஷ்மீர் அரசுடன் ஆலோசனைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார்.

**மாநிலத் தகுதி வழங்க வேண்டும் என்று வாதிட்ட வழக்கறிஞர் ஒருவர், “ஒரு மாநிலத்தை யூனியன் பிரதேசமாக மாற்ற ஒன்றிய அரசுக்கு அனுமதி அளித்தால், நாளை அவர்கள் உத்தரப் பிரதேசம் அல்லது தமிழ்நாட்டைக் கூட யூனியன் பிரதேசமாக மாற்ற முடியும்” என்று குறிப்பிட்டார்.**

இந்த வாதங்களை கேட்டறிந்த நீதிபதிகள், ஜம்மு - காஷ்மீருக்கு மாநில அந்தஸ்தை மீண்டும் வழங்குவது தொடர்பான மனுவுக்கு நான்கு வாரத்தில் பதிலளிக்க ஒன்றிய அரசுக்கு உத்தரவிட்டனர்.

“ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து எப்போது தரப்படும் என்பதற்கு காலக்கெடு விதிக்க முடியாது” என்று உச்ச நீதிமன்றத்தில் ஒன்றிய அரசு பதில் அளித்துள்ளது. காலக் கெடு விதிக்க முடியாது என்று உச்சநீதிமன்றத்தில் சொல்லி விட்டு, உரிய நேரத்தில் மாநில அந்தஸ்து தரப்படும் என்று அமித்ஷா சொல்வது ‘இரட்டை நாக்கு வாக்குமூலம்’ ஆகும்.

**“மாநில அந்தஸ்து வழங்குவதற்கு முன்பாக ஜம்மு - காஷ்மீரை தயார்படுத்த வேண்டிய நிலை எழுந்துள்ளது.” என்று ஒன்றிய அரசின் சார்பில் உச்சநீதிமன்றத்தில் சொல்லப்பட்டது. என்ன தயார் படுத்தப் போகிறார்கள்? ‘மாநிலம் அமைதியாகி விட்டது’ என்கிறார் உள்துறை அமைச்சர். இதற்கு மேல் என்ன தயார் செய்யப் போகிறார்கள்? வன்முறையைக் காரணம் காட்டி மாநிலத் தகுதியை விலக்கினீர்கள். அமைதி ஏற்பட்ட பிறகும் ஏன் மாநிலத் தகுதி தர மறுக்கிறீர்கள்? எதற்காக காஷ்மீர் மக்களை பழிவாங்குகிறீர்கள்?**



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் நேற்று (24.10.2025) சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் சார்பில் 42.45 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நுழைவு வாயில், கண்காணிப்பு கோபுரம், பார்வையாளர் மாடம், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டுவரப்பட்டது. இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்ட அமைச்சர்கள், நிர்வாகிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் பங்கேற்றனர்.

### சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை சார்பில்

# ரூ.42.45 கோடியில் புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார்!

**சென்னை, அக். 25 -**

**சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் (CRRT) சார்பில் ரூ.42.45 கோடி செலவில் புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டுவரப்பட்டது.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களால் நேற்று (24.10.2025) சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் சார்பில் 42.45 கோடி ரூபாய் செலவில் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நுழைவு வாயில், கண்காணிப்பு கோபுரம், பார்வையாளர் மாடம், குழந்தை களுக்கான விளையாட்டுப் பகுதி உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டுவரப்பட்டது.

**முத்தமிழறிஞர் கலைஞர் திறந்து வைத்த பூங்கா!**

சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம், 58 ஏக்கர் பரப்பினை கொண்ட அடையாறு உப்பங்கழியினை சீரமைத்து, ‘தொல்காப்பியப் பூங்கா’ உருவாக்கப்பட்டு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் 2008ஆம் ஆண்டு அடிக்கல் நாட்டப்பட்டது. பின்னர், பூங்கா பணிகள் நிறைவுற்று 22.01.2011 அன்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களால் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது.

கடந்த காலத்தில் முறையான பராமரிப்பின்றி இருந்த தொல்காப்பியப் பூங்காவினை மேம்படுத்திட ஜூலை 2021 ஆம் ஆண்டு சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளை மூலமாக ‘தொல்காப்பியப் பூங்கா மறுமேம்பாட்டு’ பணிகளை மேற்கொள்ள திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு, தொல்காப்பியப் பூங்காவின் மறுமேம்பாட்டு பணிகள் மேற்கொள்வதற்கு தமிழ்நாடு அரசு 42.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நிருவாக அனுமதி வழங்கியது.

**நவீன வசதிகளுடன் புதுப்பிக்கப்பட்ட பூங்கா!**

அதன் தொடர்ச்சியாக, சென்னை நதிகள் சீரமைப்பு அறக்கட்டளையின் மூலம் நவீன வசதிகளுடன் கூடிய புதிய நுழைவு வாயில், கண்காணிப்பு கோபுரம், பார்வையாளர் மையம், பார்வையாளர் மாடம், நடைபாதை, சிற்றுண்டியகம், புதிய கழிப்பறை, திறந்தவெளி அரங்கம், இணைப்பு பாலம், கண்காணிப்பு கேமராக்கள், குழந்தைகளுக்கான விளையாட்டுப் பகுதி போன்ற பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

மேலும், பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலம் தொல்காப்பியப் பூங்கா பகுதி 1 மற்றும் பகுதி 2 இணைத்து சாந்தோம் சாலையில் உயர்மட்ட நடைமேம்பாலம் (Skywalk) மற்றும் டாக்டர் டி.ஜி.எஸ். தினகரன் சாலையின் குறுக்கே இருக்கும் குழாய் கால்வாய்க்கு மாற்றாக மூன்று வழி பெட்டகக் கால்வாய் (Triple Cell Box Culvert) அமைக்கப்பட்டுள்ளது.

‘தொல்காப்பியப் பூங்கா’, சுற்றுச்சூழல் கல்வி மற்றும் ஆராய்ச்சி மையமாக செயல்பட்டு, சுற்றுச்சூழல் கல்வி விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடத்தப்பட்டும் வருகின்றது. இயற்கை சூழ்நிலை நிறைந்துள்ள தொல்காப்பியப் பூங்காவில் பொதுமக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ள 3.20 கிலோ மீட்டர் நடைப்பயிற்சி பாதையும் அமைக்கப்பட்டுள்ளது.

**பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைக்கப்பட்ட பூங்கா!**

தொல்காப்பியப் பூங்காவில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு மேம்பாட்டுப் பணிகளை 1.10.2025 அன்று நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்த முதலமைச்சர் அவர்கள், பூங்காவினை மக்களின் முழு பயன்பாட்டிற்கு விரைவில் கொண்டுவர வேண்டும் என்று அறிவுறுத்தினார்கள். அதன்படி, நேற்று தொல்காப்பியப் பூங்காவினை பொதுமக்களின் பயன்பாட்டிற்கு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் மீண்டும் கொண்டுவரப்பட்டது.

மேலும், முதலமைச்சர் அவர்கள் சுற்றுச்சூழல் கல்வியினை குறிப்பாக சென்னை மாநகராட்சி, அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்கள் பயன் பெற்றிடும் வகையில், மாணவர்களுக்கான பிரத்யேக சுற்றுச்சூழல் கல்விச்சுற்றுலா (Students' EcoTour) ஏற்பாடுசெய்யவும், தொல்காப்பியப் பூங்காவினை பார்வையிடும் அனைத்து மாணவர்களுக்கும் (அரசு / தனியார் பள்ளி) ஊட்டச்சத்து மிக்க சிற்றுண்டி வழங்கிடவும் அறிவுறுத்தியுள்ளார்கள்.

தொல்காப்பியப் பூங்காவினை பொதுமக்கள் (ஒருவேளையில் அதிகபட்சம் 100 நபர்களுக்கு மிகாமல்) திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரையும் பொது விடுமுறை நாட்கள் தவிர இணையதள முன்பதிவின் மூலம் பார்வையிடலாம்.

**மாணவர்கள் முன்பதிவு செய்து பார்வையிடலாம்!**

மேலும், மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்வி நிகழ்ச்சியில் கல்வி நிறுவனங்கள் (பள்ளி /கல்லூரி) அதிகபட்சம் 100 மாணவர்கள் ஆசிரியர்களுடன் இணையதளம் மூலம் முன்பதிவு செய்து திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை பார்வையிடலாம். பள்ளிகள் அனுமதிக்கப்படும் நாட்கள்: சென்னை மாநகராட்சி பள்ளிகள் செவ்வாய்க்கிழமை மற்றும் சனிக்கிழமை; அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகள் வெள்ளிக்கிழமை; தனியார் பள்ளிகள் திங்கட்கிழமை, புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை. பூங்காவின் பராமரிப்புக்காக வியாழக்கிழமை விடுமுறை விடப்படும்.

அனைத்து நாட்களும் (திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை பொது விடுமுறை நாட்கள் உட்பட) காலை 6.30 மணி முதல் 8.00 மணி வரை மற்றும் மாலை 4.30 மணி முதல் 6.00 மணி வரை பொதுமக்கள் நடைப்பயிற்சி மேற்கொள்ள அனுமதிக்கப்படுகின்றனர்.

**தொல்காப்பியப் பூங்கா - பார்வையாளர்கள் நேரம் மற்றும் நுழைவு கட்டண விவரங்கள்**

மாணவர்களுக்கான சுற்றுச்சூழல் கல்வி (Students' EcoTour) கல்வி நிறுவனங்கள் (பள்ளி /கல்லூரி) (அதிகபட்சம் 100 மாணவர்கள் ஆசிரியர்களுடன் இணையதள முன்பதிவு மூலம்) - திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை (வியாழக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர) காலை 9.30 மணி முதல் நண்பகல் 12.30 மணி வரை

**பள்ளிகள் அனுமதிக்கப்படும் நாட்கள்**

சென்னை மாநகராட்சி பள்ளிகள்: செவ்வாய்க்கிழமை மற்றும் சனிக்கிழமை - அரசு/அரசு உதவிபெறும் பள்ளிகள்: வெள்ளிக்கிழமை - தனியார் பள்ளிகள்: திங்கட்கிழமை, புதன்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை.

பொதுமக்களுக்கான வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணம் (Guided Tour for General Public) (அதிகபட்சம் 100 நபர்கள், இணையதள முன்பதிவு மூலம்) - திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை (வியாழக்கிழமை மற்றும் பொது விடுமுறை நாட்கள் தவிர) (பிற்பகல் 2.30 மணி முதல் மாலை 4.30 மணி வரை)

பொது மக்களுக்கான நடைப்பயிற்சி (பதிவுசெய்யப்பட்ட நடைப்பயிற்சி / ஒரு முறை நுழைவு) (அதிகபட்சம் 100 நபர்கள் இணையதள முன்பதிவு மூலம்) - அனைத்து நாட்களும் (திங்கட்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை பொது விடுமுறை நாட்கள் உட்பட) காலை: காலை 6.30 மணி முதல் காலை 8.00 மணி வரை மாலை: மாலை 4.30 மணி முதல் மாலை 6.00 மணி வரை

**வ. எண் விவரங்கள் நுழைவு கட்டணம் (ரூ.) ஒரு நபருக்கு**

1. மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் (தனியார் பள்ளி /கல்லூரி) 10/ ஒரு நபருக்கு
2. பொது மக்களுக்கான வழிகாட்டப்பட்ட சுற்றுப்பயணம் 20/ஒரு நபருக்கு
3. நடைப்பயிற்சி அனுமதி ஒரு முறை நுழைவு 20/ ஒரு நபருக்கு
4. நடைப்பயிற்சி அனுமதி (பதிவு செய்யப்பட்ட நடைப்பயிற்சி அனுமதி இணையதள பதிவு வாயிலாக) 500/ 1,500/ 2,500/5,000/ 1 மாதம் 3 மாதங்கள் 6 மாதங்கள் 12 மாதங்கள்
5. மகிழுந்து 20/ ஒன்றிற்கு
6. சிற்றுந்து/பேருந்து 50/ ஒன்றிற்கு
7. புகைப்பட கருவி 50/ ஒன்றிற்கு
8. ஒளிப்பதிவு கருவி 100/ஒன்றிற்கு

**மேலும் நுழைவுசீட்டு கட்டணம், முன்பதிவு மற்றும் பிற விவரங்கள்** www.crrt.tn.gov.in **என்ற இணையதளத்தில் தெரிந்துக் கொள்ளலாம்.**

இந்த நிகழ்ச்சியில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, நாடாளுமன்ற உறுப்பினர்கள் டி.ஆர்.பாலு, திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், மேயர் திருமதி ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் த.வேலு, ஜெ.கருணாநிதி, துணை மேயர் மு.மகேஷ்குமார், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மைச் செயலாளர் முனைவர். தா.கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் எஸ்.வி.சேகர், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### எழிலூட்டிப் புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா!

# பசும் போர்வைகளால் சென்னையை அலங்கரிப்போம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவில் மகிழ்ச்சி!

சென்னை, அக். 25 -

சென்னை, இராஜா அண்ணாமலைபுரத்தில் எழிலூட்டிப் புதுப்பிக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்கா பொதுமக்கள் பயன்பாட்டிற்கு மீண்டும் கொண்டுவரப்பட்டது குறித்து, முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவு வருமாறு:-

**மாநகரத்தின் இயந்திர வாழ்க்கைக்கிடையே இயற்கையின் மடியில் இளைப்பாறுதல் தரும் சோலையாக முத்தமிழறிஞர் கலைஞரால் உருவாக்கப்பட்ட தொல்காப்பியப் பூங்காவுக்கு மேலும் எழிலூட்டிப் புதுப்பித்திருக்கிறது நமது திராவிட மாடல் அரசு.**

**உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்ச்சி அளிக்கும் இத்தகைய பசும் போர்வைகளால் சென்னையை அலங்கரிப்போம்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.



திருவண்ணாமலை, அண்ணாமலையார் மலை அடிவார குடியிருப்போர் நல சங்க நிர்வாகிகள் மேயர் நிர்மலாவேல்மாறன் தலைமையில், விரைவில் பட்டா வழங்க கோரி பொதுப்பணித்துறை அமைச்சர் எ.வ.வேலு சந்தித்தனர். உடன் எஸ்.பன்னீர்செல்வம், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், சு.ராஜாங்கம், வழக்கறிஞர் அ.அருள்குமரன் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் உள்ளனர்.